Ontario

நிதியமைச்சு




*செய்தி வெளியீடு*

# வரவுசெலவுத் திட்டம் 2015, ஒன்ராறியோ வரலாற்றில் மிகப் பெரும் உட்கட்டமைப்பு முதலீட்டைச் செய்கிறது

*அரசாங்கம் ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புகிறது; பொருளாதாரத்தை வளர்க்கிறது; தொழில்களை உருவாக்குகிறது*

ஏப்ரல் 23, 2015

நிதியமைச்சர் சார்ள்ஸ் சூஸா (Finance Minister Charles Sousa) 2015 வரவுசெலவுத் திட்டத்தை இன்று வெளியிட்டார். பொருளாதார வளர்ச்சிக்கும் புதிய தொழில்களுக்கும் ஆதரவளிப்பதற்கென, முன்னொருபோதுமில்லா முதலீடு ஒன்றினை இது சாத்தியமாக்கியுள்ளது.

குடும்பங்களும் சமூகங்களும் தங்கியுள்ள முக்கிய பொதுச் சேவைகளைக் கடைப்பிடித்துவரும் அதேவேளை, பொருளாதாரத்தை வளர்ப்பதற்குத் தேவையான மேலும் பல புதுமையான வழிமுறைகளைக் கண்டறிவதில் அரசாங்கம் கொண்டுள்ள உறுதிப்பாட்டில் நின்று, இந்த வரவுசெலவுத் திட்டம் செயற்படுகின்றது. ஒன்ராறியோ வரலாற்றில் இடம்பெறும் மிகப் பெரிய உட்கட்டமைப்பு முதலீட்டுக்கு ஆதரவளிப்பதற்கென, மாகாணச் சொத்துக்களின் பெறுமதியை உச்சப்படுத்துவதனை இது உள்ளடக்குகின்றது.

சமூகப் பொறுப்புடைமைக்கான, ஒன்ராறியோவின் வலுவான திடசங்கற்பத்தைக் கட்டிக்காத்து வரும் அதேவேளை, வாடிக்கையாளரின் வசதியையும் தேர்வையும் அதிகரிப்பதற்கென, பலசரக்குக் கடைகளில் பியர் விற்பனையையும் மாகாணம் அறிமுகம் செய்கின்றது.

*2014 வரவுசெலவுத் திட்டத்தில்* எதிர்வுகூறப்பட்டதை விடக் குறைவாக, 2015-16இல் 8.5 பில்லியன் டொலர் பற்றாக்குறை ஒன்றினை, ஒன்ராறியோ முன்கணிப்பீடு செய்கிறது. பூகோளப் பொருளாதார மந்தநிலை ஆரம்பித்த காலத்திலிருந்து, இது ஆகக்குறைந்த அளவிலான பற்றாகுறையாகும். 2016-17இல் பற்றாக்குறை 4.8 பில்லியன் டொலரையும், 2017-18இல் சமநிலைக்கான ஒரு மீள்வரவினையும் இலக்காகக் கொண்டு, சமநிலைப் பாதையை நோக்கி ஒரு ஆழ்சிந்தனைமிக்க, ஆழ்ந்தமர்ந்த அணுகுமுறையை மாகாணம் தொடர்ந்து மேற்கொள்ளும். மக்களது திறமைகளிலும் திறன்களிலும் முதலீடு செய்தல், சாலைகள், போக்குவரத்துப் பாதைகள் போன்ற பொது உட்கட்டமைப்புக்களைக் கட்டியெழுப்புதல், வணிகங்கள் நன்கு வளரவல்ல

சக்திவாய்ந்த, புதுமையான ஒரு சூழலை உருவாக்குதல், ஒரு பாதுகாப்பான பணி ஓய்வுச் சேமிப்புத் திட்டத்தை நிர்மாணித்தல் என்பனவூடாக அரசாங்கத்தின் நான்கு பாகத் திட்டம், ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புகிறது.

<u>ஒன்ராறியோவின் உட்கட்டமைப்பைக் கட்டியெழுப்புதல்</u>

எதிர்காலத்துக்குரிய கல்வி, ஆரோக்கியப் பராமரிப்பு, சாலை, போக்குவரத்துப் பாதைகள் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு, பொது உட்கட்டமைப்பைப் புதுப்பித்தலும் விரிவாக்கலும் ஒன்ராறியோவின் கைத்தொழில்களுக்கு ஆதரவளிக்கின்றது; தொழில்களை உருவாக்குகின்றது; பூகோளப் பொருளாதாரத்தில் ஒன்ராறியோவைச் சிறந்த இடத்தில் அமர்த்துகின்றது. ஒன்ராறியோ முதலீடு செய்கின்றபோது, அது கட்டியெழுப்புகின்றது – கட்டியெழுப்புகின்றபோது அது வளர்கின்றது. பொது உட்கட்டமைப்பில் முன்னொருபோதுமில்லாத, 130 பில்லியனுக்கும் அதிகமான முதலீட்டை 10 ஆண்டுகளில் செய்வதற்கான ஒன்ராறியோவின் திட்டத்தின்மீது, 2015 வரவுசெலவுத் திட்டம் தொடர்ந்து விரிவடைந்து செல்கின்றது. இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

- அடுத்த 10 வருடங்களில் மொத்தம் 31.5 பில்லியன் டொலராக்கும்பொருட்டு, ஒன்ராறியோவை முன்னோக்கி நகர்த்தலுக்கென (Moving Ontario Forward) ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியை 2.6 பில்லியன் டொலரால் அதிகரித்தல் – ரொறன்ரோ மற்றும் ஹமில்ரன் பெரும்பாகப் (Greater Toronto and Hamilton Area – GTHA) போக்குவரத்து வேலைத்திட்டங்களுக்கு16 பில்லியன் டொலர்; GTHAக்கு வெளியே போகுவரத்து, ஏனைய முன்னுரிமை பெறும் உட்கட்டமைப்பு வேலைத்திட்டங்களுக்கு சுமார் 15 பில்லியன் டொலர். இந்த அதிகரிப்பானது மாகாணத்தின் சொத்துப்பெறுமதி உச்சப்படுத்தல் திட்டத்தின்மீதான ஓர் உயர்ந்த இலக்கின் பெறுபேறாகும். மேலும்

- 2015-16இல் சாலைகள், பாலங்கள், பொதுப்போக்குவரத்து, நீர்த்தொகுதிகள், மருத்துவமனைகள், பாடசாலைகள் போன்ற உட்கட்டமைப்பில் ஒரு திட்டமிடப்பட்ட11.9 பில்லியன் டொலர் முதலீடு.

அரசாங்கம் தனது சொத்துக்களின் பெறுமதியை உச்சப்படுத்துவதற்கான ஒரு திட்டத்துடன் முன்னோக்கி நகர்கிறது. அதன் மூலமாகக் கிடைக்கும் நிகர வருமானத்தை, பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், வேலை உருவாக்கத்தை ஊக்குவிக்கவுமென, ட்ரில்லியம் ட்ரஸ்ற்றினூடாக (Trillium Trust) பொதுப்போக்குவரத்துப் பாதை, போக்குவரத்து, மற்றும் ஏனைய முன்னுரிமை உட்கட்டமைப்பு வேலைத் திட்டங்களில் மீள்முதலீடு செய்கிறது. ஒன்ராறியோவை முன்னோக்கி நகர்த்தல் (Moving Ontario Forward) திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளை அதிகரித்தலானது, முன்னுரிமைச் செயல் திட்டங்களைத் துரிதப்படுத்தி, புதிய செயல் திட்டங்கள் உள்வர இடமளிக்கும்.

- நிலையான பொதுமக்கள் பலாபலன்களையும், தற்போதய பொதுமக்கள் மற்றும் வீதம் செலுத்துவோர் பாதுகாப்புக்களையும் உருவாக்குவதற்கென, Hydro One உரிமையை விரிவாக்குதல்.

- பிரதான அமைவுபெற்ற வீட்டு ஆதனச் சொத்துகள் பலவற்றை விற்பனை செய்யவென அவற்றை மீள்நோக்குதல்.

<u>தொழில்களை உருவாக்க, வணிகங்களுடன் பங்காளியாதல்</u>

வெகுமதிமிக்க, உயர் வேதனம் மிக்க தொழில்களை ஒன்ராறியோ தொடர்ந்து உருவாக்குகின்றது. பொருளாதார மந்தம் காரணமாக ஜுன் 2009இல் தாழ்நிலையிலிருந்த வேலைவாய்ப்பு, ஓர் அரைமில்லியனுக்கும் மேலாக உருவாக்கப்பட்ட புதிய தொழில்களூடாக, மீண்டும் வலுவுடன் அதிகரித்துள்ளது — அவற்றுள் முக்கால் பங்கு, சராசரிக்கும் மேலான ஊதியம் வழங்கும் தொழில் துறை சார்ந்தவை. பூகோளப் பொருளாதார மந்தநிலைக் காலம் தொட்டு, இழந்த சகல தொழில்களையும் மாகாணம் இப்போது மீளப் பெற்றுள்ளது. பொருளாதார உறுதிநிலையை உருவாக்கி, அனைத்து ஒன்ராறியோவாசிகளது செல்வச் செழிப்பினையும் - பாதுகாப்பதுடன், தனியாள் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும் இந்த உயர்தர வேலைகள் வழங்குகின்றன.

பின்வரும் வழிகளால் ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை 2015 வரவுசெலவுத் திட்டம் தொடர்ந்து கட்டியெழுப்புகிறது:

- அதிக வணிகங்களுடன் பங்காளிகளாவதற்கும், உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கும், புத்தாக்கத்தை அதிகரிப்பதற்கும், ஏற்றுமதியை வளர்ப்பதற்கும் வேலைகளை உருவாக்குவதற்குமென, 2.5 பில்லியன் டொலர் வேலைகள் மற்றும் செழுமை நிதியத்துக்கான (Jobs and Prosperity Fund) நிதியளிப்பை அடுத்த 10 ஆண்டுகளுக்கு அதிகரித்தல். அடுத்த 10 ஆண்டுகளில் நிதியத்தை 2.7 பில்லியன் டொலரால் கூட்டுவதற்கும், வனத்துறைக்கான தகுதிநிலையை நீடிப்பதற்குமென, 2015-16 தொடக்கம் மொத்தம் 200 மில்லியன் டொலர் நிதி அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் என *2015 வரவுசெலவுத் திட்டம்* அறிவிக்கின்றது.

- தொழில்களையும் பூகோளப் போட்டித் தன்மையையும் தக்கவைக்கும் தகுதிமிக்க, பாரிய வடபிரதேசக் கைத்தொழில் கட்டடங்களுக்கான மின்சார விலை நிர்ணயிப்பு ஆதரவை மார்ச் 2016க்குப் பின்னரும் தொடர்தல்.

- ஒரு செழிப்பான பொருளாதார எதிர்காலத்தையும் மலர்ச்சியான சமூகத்தையும் உறுதிசெய்யும் பொருட்டு, காலநிலை மாற்றத்தைக் கையாள்தல். ஒன்ராறியோ தனது கரி (carbon) விலை நிர்ணயிப்புப் பொறிமுறையாக, ஒரு வரையறையுடனும் மற்றும் பரிமாற்றுத் தொகுதியுடனும் முன்னோக்கி நகரும். ஒரு வரையறை மற்றும் பரிமாற்றுத் திட்டத்திலிருந்து கிடைக்கும் வருமானம், க்றீன்ஹௌஸ் (greenhouse) வாயு மாசுகளைக் குறைக்க உதவும் முக்கிய முன்னுரிமைகளை நோக்கித் திருப்பப்படும்.

<u>உயர்திறன் மிக்கதோர் வேலைப் படையை உண்டாக்குதல்</u>

மக்களே ஒன்ராறியோவின் மிகப்பெரும் பலம். இன்று மக்களில் முதலீடுசெய்து, சரியான திறன்களையும் சரியான வேலைகளையும் பெறுவதற்கு வேண்டிய ஆதரவை ஒன்ராறியோ வாசிகளுக்கு வழங்குவதன் மூலம், நாளை ஒரு வலுவான பொருளாதாரத்தை அரசாங்கம் கட்டியெழுப்புகிறது. வரவுசெலவுத்திட்ட நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- முன்பள்ளி, முழுநேரப் பாலர் வகுப்புத் தொடக்கம் அனுபவக் கல்விசார் பரீட்சார்த்தச் செயல் திட்டங்களுடன் கூடிய, பின் இடைநிலைக் கல்வி, வர்த்தகத் தொழிற் பயிற்சித் திட்டங்கள் ஈறாக, கல்வி மற்றும் வினைத்திறன் பயிற்சியினை தொடர்ந்து முன்னேற்றுதல்.
- இளைஞர் தொழிற் திட்டங்களுக்கான மொத்த முதலீடு 565 மில்லியன் டொலருக்கும் மேலாக அமையும் வகையில், அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளில் ஒன்ராறியோ இளைஞர் தொழில்கள் மூலோபாயத்தில் (Ontario Youth Jobs Strategy) மேலதிகமாக ஒரு 250 மில்லியன் டொலரை முதலீடுசெய்தல்.
- மாணவர்களுக்கான நிதியுதவியினை வலுப்படுத்தும் பொருட்டு, ஒன்ராறியோ மாணவர் உதவித் திட்டத்தினை (Ontario Student Assistance Program) நவீனமயப்படுத்தல்.

<u>பொறுப்புடன் நிர்வகித்தல்</u>
வலுவான நிதி நிர்வாகத்தை நிரூபிக்கக்கூடிய பதிவுகள் இவ்வரசாங்கத்திற்கு உண்டு.

பின்வரும் வழிகளூடாக, *2015 வரவுசெலவுத் திட்டம்* நிதிச் சமநிலையை மேலும் மேம்படுத்துகின்றது:

- பல்லாண்டுத் திட்டத்திற்கும் வரவுசெலவுத் திட்டமிடலுக்குமான, செயல் திட்ட மீள்நோக்கல், புதுப்பித்தல், மாற்றியமைத்தல் (Program Review, Renewal and Transformation - PRRT), எனும் அடிப்படையில் புதியதொரு அணுகுமுறையைத் தொடர்கிறது. செயல் திட்டங்களையும் சேவைகளையும் மாற்றியமைப்பதற்கென, குறுங்கால மற்றும் நெடுங்கால வாய்ப்புக்கள் இரண்டையும் இது இனங்காண்கின்றது. அத்துடன் செயற்படாத, முக்கிய முன்னுரிமைகளுடன் தொடர்புறாத அல்லது ஒரு தெளிவான பொதுசன விருப்பினைப் பூர்த்தி செய்யாத செயல் திட்டங்களை முடிவுக்குக் கொண்டுவரும் கடினமான முடிவுகளை எடுக்கிறது. சாதுரியங்களை இனங்கண்ட, செலவினங்களைக் குறைத்த அல்லது முன்னணிச் சேவைகளைப் பாதிக்காமல், நிர்வாக அடிப்படைச் செலவினங்களைக் குறைத்த ஏராளம் முன்னெடுப்புகள் ஊடாக, 2014-15 காலப் பகுதிக்கான ஒரு 250 மில்லியன் டொலர் செயல் திட்ட மீள்நோக்குச் சேமிப்பு இலக்கு எய்தப்பட்டது. செயல் திட்ட மீள்நோக்குச் சேமிப்பு இலக்கானது, 2015–16, 2016–17, 2017–18 காலப்பகுதிகளுக்குத் தனித்தனியே 500 மில்லியன் டொலராகும்.

- 2013–14 மற்றும் 2017–18 ஆகியனவற்றிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சராசரி ஒரு 0.9 சதவீதமாகப் பேணப்படும் என முன்கணிப்பீடு செய்யப்பட்ட, நடுத்தர காலத்துக்கான செயல் திட்டச் செலவின வளர்ச்சியை நிர்வகிக்கின்றது.

- ஆண்டொன்றுக்குச் சராசரியாக மொத்த சுகாதாரத்துறைச் செலவினம் 1.9 சதவீதத்தாலும், கல்வித்துறை 2.0 சதவீதத்தாலும், சிறுவர்கள் மற்றும் சமூக சேவைகள் துறை 2.9 சதவீதத்தாலும், நீதித்துறை 1.5 சதவீதத்தாலும் வளருமென முன்கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- பின் இடைநிலைக் கல்வி மற்றும் பயிற்சித்துறை பெருமளவில் மாற்றமடையமாட்டாது. ஏனைய சகல செயல்திட்டச் செலவினமும் வருடமொன்றுக்குச் சராசரி 5.5 சதவீதத்தால் குறையும் என முன்கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

- ஒன்ராறியோ பொதுச் சேவை மற்றும் ஒன்ராறியோவின் தற்போதய நிதிக் கட்டமைப்புக்குள்ளிருக்கும் விரிவான பொதுச்சேவை என்பவற்றுடனான கூட்டு ஒப்பந்தங்களுக்கெனத் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது. ஊதிய அதிகரிப்புக்கான மேலதிக நிதியளிப்பை இது உள்ளடக்கவில்லை. எந்தவித மிதமான ஊதிய அதிகரிப்பும், ஒரு நிகர பூச்சிய ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கென வேலை வழங்குநர்களுக்குக் கிடைக்கக்கூடிய தற்போதய நிதியளிப்புக்குள், ஏனைய நடவடிக்கைகளால் ஈடுசெய்யப்பட வேண்டும்.
  - ஜூலை 2012 முதலாக, முழு ஒன்ராறியோவின் மாகாணப் பொதுத்துறையினது, பேசித்தீர்க்கப்பட்ட, சராசரி வருடாந்த ஊதிய அதிகரிப்பு 0.6 சதவீதமாகும். இது ஒன்ராறியோ உள்ளூராட்சிப் பொதுத்துறையினது (1.9 சதவீதம்), ஒன்ராறியோவிலுள்ள கூட்டாட்சிப் பொதுத்துறையினது (1.7 சதவீதம்), ஒன்ராறியோவின் தனியார்துறையினது (2.0 சதவீதம்) ஊதிய அதிகரிப்பை விடக் குறைவானது.

- வணிகங்களுக்கான ஊதியமளிப்பு முறைமையைச் சமப்படுத்தி உதவுதற்கென, ஒன்ராறியோவில் வருடாந்தம் 15 பில்லியன் டொலர் பொருளாதார நடவடிக்கை எனக் கணிப்பிடப்பட்ட, தலைமறைவுப் பொருளாதாரத்துடன் மாகாணம் போராடுகிறது. சிறந்த தகவல் சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வுகளூடாகவும், சட்டரீதியான புகையிலையை இனங்காட்டும் அதிகப்படியான நடவடிக்கைகளூடாகவும், நிறுவன வரித் தவிர்ப்புக்களைக் குறைப்பதனூடாகவும் மகாணம் இதனைச் சாதிக்கின்றது. மின்னியல் முறையிலான விற்பனையைக் குறைக்கவல்ல தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதையும், உற்பத்தி செய்வதையும், அல்லது விநியோகிப்பதையும் சட்டவிரோதமாக்க மாகாணம் முன்மொழியும்.

**மேற்கோள்**

"ஒன்ராறியோவின் 2015 வரவுசெலவுத் திட்டம் என்பது மாகாணத்தின் நிதி பற்றிய ஒரு அறிக்கை என்பதற்கும் மேலானது. அது மாகாணம் பூராகவும் உள்ள மக்களது வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாத்தல், பத்திரப்படுத்தல், மேம்படுத்தல் என்பன பற்றியதாகும். வரலாற்று முக்கியத்துவம்

வாய்ந்த உட்கட்டமைப்பு, பொதுப் போக்குவரத்து முதலீடுகள் என்பன ஊடாக, நவீன பொருளாதாரத்தில் கனடாவுக்குத் தலைமை தாங்கவென ஒன்ராறியோ தாயாராக்கப்பட்டுள்ளது. இது சந்தைகளுக்குப் பாவனைப் பொருட்களை விரைவாக நகர்த்திச் சென்று, பணியிடத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பாக வீட்டுக்கு எடுத்துச் செல்லும் என்பதற்கும் மேலாக, ஒன்ராறியோவை மேலும் போட்டித்தன்மை மிக்க, உற்பத்தித்திறன் மிக்க ஒரு மாகாணமாக உருவாக்கும். மக்களது திறன்களிலும் பயிற்சிகளிலும் முதலீடு செய்தல், ஒரு சக்திமிக்க, போட்டிமிக்க வணிக சூழலுக்கு ஆதரவளித்தல், ஒரு பாதுகாப்பான பணி ஓய்வை வளர்த்தெடுத்தல், எமது செயல் திட்டச் செலவினங்களை நிர்வகித்தல்  போன்றவற்றிற்கான எமது திட்டத்தை இந்த வரவுசெலவுத் திட்டம் வடிவமைக்கின்றது. ஒன்ராறியோ தனது வரவுசெலவுத் திட்டத்தை 2017-18 அளவில் சமநிலைப்படுத்துவதற்கான சரியான பாதையில் செல்கிறது. அதனை நாம் ஒரு நீதியானதும் பொறுப்புமிக்கதுமான வழியில் செய்துமுடிப்போம்.”
— Charles Sousa, நிதியமைச்சர்

<u>விரைவான உண்மைகள்</u>

- 380,000க்கும் அதிகமான மாணவர்களுக்கு உதவியாக, 2013-14இல், அரசாங்கம் 1.3 பில்லியன் டொலருக்கும் மேலான தொகையை,  மாணவர் மானியங்களுக்கும் கடன்களுக்குமென வழங்கியிருக்கிறது.
- 2013-14இல்  கனடா பூராவும் 150,000க்கும் அதிகமான வேலைவழங்குநர்கள் உட்பட, ஏறக்குறைய ஒரு மில்லியன் ஒன்ராறியோவாசிகளுக்கு வேலைவாய்ப்பு ஒன்ராறியோ (Employment Ontario) வலையமைப்பு உதவியிருக்கின்றது.
- ஜூன் 1, 2014இல் ஒரு மணித்தியாலத்திற்கான ஆகக் குறைந்த ஊதியம் 11 டொலராக அதிகரித்தது. ஒக்டோபரில் இது 11.25 டொலராக அதிகரிக்கும்.

**மேலும் அறிந்துகொள்ளுங்கள்**

ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டத்தை வாசியுங்கள்

வரவுசெலவுத் திட்ட உரையை வாசியுங்கள்

வரவுசெலவுத் திட்டத்தின் சிறப்பம்சங்களை வாசியுங்கள்

2015 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டத்தின் பின்னணித் தகவல்களை வாசியுங்கள்:

- ஒன்ராறியோவின் உட்கட்டமைப்பைக் கட்டியெழுப்புதல்
- தொழில்களை உருவாக்க, வணிகங்களுடன் பங்காளியாதல்
- உயர்திறன் மிக்கதொரு தொழிற்படையை உண்டாக்குதல்
- சகல ஒன்ராறியோவாசிகளுக்குமென ஒரு நீதியான சமூகத்தில் முதலீடு செய்தல்
- தேசியத் தலைமைத்துவம் – வலுவான ஒன்ராறியோ, வலுவான கனடா

- சகல ஒன்ராறியோவாசிகளுக்குமான பணி ஓய்வுப் பாதுகாப்பை வலுவாக்குதல்
- ஒன்ராறியோவைக் கட்டியெழுப்பவென, பெறுமதியை உச்சமாக்குதல்

அரசாங்கச் சொத்துகள் மீதான, முதலமைச்சரின் ஆலோசனைச் சபையின் இறுதிப் பரிந்துரைகளை வாசியுங்கள்

---

ஊடக விசாரணைகளுக்கு மட்டும் அழையுங்கள்:
Kelsey Ingram, அமைச்சரின் அலுவலகம், (Minister’s Office),
416-326-1409
Scott Blodgett, நிதியமைச்சு, (Ministry of Finance),
416-325-0324

பொது விசாரணைகளுக்கு அழையுங்கள்
1-800-337-7222
TTY: 1-800-263-7776

Ontario.ca/budget
Disponible en français